1974 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் இது நாட்டிலிருக்கிற புள்ளிவிவரங்களை சேகரிக்கும் இலாகாவே தவிர, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the percentage of increase as compared to the last year?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மொத்தத்தில் சென்ற ஆண்டைவிட என்று சொல்வதற்கில்லை, வாரா வாரம் ஏறுகிறது. பிப்ரவரி 15-ம் தேதி பொதுவாக நிலைமையை ஆய்ந்து பார்த்ததில் நெல் விலை 5 புள்ளிகள் குறைந்து இருப்பதாக ஒரு குறிப்பு என்னிடத்தில் தரப்பட்டிருக்கிறது.

Labourers in rubber plantations

* 348 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Plantation Labour Advisory Committee has made any representation to the effect that the Labour Laws remain un-implemented in the Rubber Plantations in the Kanyakumari district; and

(*b*) if so, the steps taken by the Government to set right the matter?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படவில்லை என்று, மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தொழிலாளர் பிரதிநிதிகள் முறையிட்டுள்ளனர்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 25 ரப்பர் தோட்டங்களில் 15 தோட்டங்கள் தங்களது மருத்துவத் திட்டங்களுக்கு அரசின் ஏற்பளிப்பை முன்னரே பெற்றுள்ளன. மருத்துவத் திட்டங்களுக்கு அரசின் ஏற்பைப் பெறத் தவறிய நிர்வாகிகள் மீது தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தண்டனைக்குரிய நடவடிக்கை எடுப்பதில் நடைமுறைகள் பல பின்பற்றப்படவேண்டியிருப்பதால் முடிவு தெரிவதற்குச் சில காலமாகும்.

மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தையும், விதிகளையும் மீறியதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில், தனியார் மலைத் தோட்ட (பயனியர் கோதலம் பள்ளம் எஸ்டேட்) நிர்வாகத்தின் மீது வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது. தொழிலதிபர் குற்றவாளி எனத் தீர்மானிக்கப்பட்டு அபராதம் விதிக்கப் பட்டார்.

அரசு ரப்பர் மலைத்தோட்டங்களைப் பொறுத்தவரை, அரசு ரப்பர் தோட்டங்களில் மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டமும் விதிகளும் செயல்படுத்தப்படுவதை ஆய்வு செய்வதற்காக, தொழிலாளர் நல வேலைவாய்ப்புத் துறையின் 19—2—1973 நாளிட்ட 116 ஆம் எண் அரசாணையில் அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தோட்டத்தில் ஊதியச் சீட்டுகளும், பணிப்பதிவேடுகளும் கொடுக்கப்படவில்லை என்று திட்டவட்டமான புகார்கள் வந்துள்ளன. இவற்றை வழங்க ஏற்பாடு செய்யுமாறும், அவ்வாறு வழங்கத் தவறியவர்கள் மீது தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் நாகர்கோவில் மலைத்தோட்ட ஆய்வாளருக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படி மலைத் தோட்டத்தில் இருக்கக்கூடிய முதலாளிகள் மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு சட்டப்படி செய்யவேண்டிய வசதிகளைச் செய்யத் தவறிவிட்டார் கள் என்பது குறித்து அவர்கள் புகார் செய்தவுடன்தான் அதை அரசாங்கம் கவனிக்கவேண்டும் என்ற நிலை இல்லாமல், 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை சட்டம் சரியாக அமல் நடத்தப் படுகிறதா என்று பார்த்து, அவர்கள் ஏதாவது வசதி செய்யவில்லை என்றால், அவர்களைத் தண்டிப்பதோடு நிறுத்திவிடாமல், முறை யான வசதிகளை உடனே அரசாங்கம் செய்துகொடுத்து, அந்தப் பணத்தை முதலாளிகளிடமிருந்து பெறுவதற்கு உண்டான வழி வகைகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அங்கிருக்கிற அதிகாரிகள் அந்த நிலைமைகளை அவ்வப்பொழுது ஆய்வு செய்துகொண்டிருக் கிறார்கள், கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள். அங்கே இருக்கிற 25 தோட்டங்களில் 24 தோட்டங்கள் தனியார்க்குச்

1974 மார்ச் 9]

சொந்தமான தோட்டங்கள். அவற்றிலெல்லாம் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். தேவராசன் : நீலகிரியில் தேயிலைத் தோட்ட முதலாளிகள் தொழிலாளிகளுக்குச் செய்யவேண்டிய வசதிகளைச் செய்யாமல் இருக்கிறார்கள். அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சமீபத்தில் நடைபெற்ற தொழிலாளர்கள் நலக் குழுக் கூட்டத்தில்கூட அதைப்பற்றிய தகவல்கள் பேசப்பட்டன. ஆனால், குறிப்பாக எந்தவிதமான புகாரும் எந்த இடத்திலும் தற்பொழுது இல்லை. ஆகவே, அதுபற்றி தனிப்பட்ட வகையில் ஏதாவது புகார் தரப்படுமானால், இந்த இலாகா அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் கூட தொழிலாளர்களுக்குத் தொழில் சட்டத்தின்படி உள்ள நன்மைகள் வழங்கப்படவில்லை என்று தெரிகிறது. தனிப்பட்ட முதலாளிகள் வைத்திருக்கின்ற ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு உரிய நன்மைகள் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதுபோல அரசுத் தோட்டங்களில் விதிமுறைகளை அமுல்படுத்தத் தவறுகின்ற அதிகாரிகள்மீதும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தனியார் யாராவது தொழிலாளர் நலச் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்தவில்லை என்றால் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஏற்கெனவே நான் குறிப்பிட்டதைப்போல பயணியர் கோதலம் பள்ளம் எஸ்டேட் நிர்வாகிகள் தொழிலாளர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் செய்யாததினால் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு 105 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, பிளான்டேஷன் இன்ஸ்பெக்டர்கள் அங்காங்கே நியமிக்கப்பட்டிருந்தாலும் இத்தகைய சட்ட முறைகேடுகள் பரவலாக நடைபெறுகின்றன. காரணம், பிளான்டேஷன் இன்ஸ்பெக்டர்கள் தங்கள் பணிகளைச்

செவ்வனே செய்யவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இப்படி சரியாகப் பணியாற்றாத பிளான்டேஷன் இன்ஸ்பெக்டர்கள்மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன? அதோடு அரசாங்கம் நடத்துகின்ற தோட்டங்களில் இத்தகைய முறை கேடுகள் நடைபெற்றிருக்கின்றனவா? அப்படியானால் அந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் பதில் கூறும்போது பரவலாகத் தவறுகள் நடைபெறுகின்றன என்று சொல்லவில்லை. 25 தோட்டங்களில் ஒரே ஒரு தோட்டத்திலிருந்து தான் புகார் வந்திருக்கிறது. ஆகவே, அதிகாரிகள் தங்களுடைய காரியங்களை செவ்வனே செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தொழிற்சங்கங்களில் உள்ளவர்கள்கூட அதிகமாகக் குறைபாடுகள் சொல்லவில்லை என்பதையும் கனம் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தத் தொழிலாளர்களுக்காக நிறுவப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழுவில் எத்தனை தொழிலாளர் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்? எத்தனை முதலாளிகள் பிரதிநிதிகள் இருக்கிறார்கள்? குழுவின் நடவடிக்கைகள் சரியாக நடைபெறுகின்றனவா? அது சம்பந்தமாக பிளான்டேஷன் லேபர் இன்ஸ்பெக்டர்களிடமிருந்து அறிக்கை வந்திருக்கிறதா? வந்திருந்தால் அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தோட்டத் தொழிலாளர்களுக்குத் தனியாக ஒரு ஆலோசனைக் குழு இருக்கிறது. அதன் உறுப்பினர் எண்ணிக்கை தற்போது என்னிடம் இல்லை. அந்தக் குழு நீண்டகாலமாக இருக்கிறது; நல்ல பல காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. தோட்டத் தொழிலாளர்கள் நலன்களில் அக்குழு அக்கறை கொண்டிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், அரசாங்கத்துக்குச் சொந்தமான ரப்பர் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு இப்படிப்பட்ட வசதிகள் செய்து தரப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை ஏதாவது எடுத்திருக்கிறதா?

1974 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரசுக்கு ஒரே ஒரு தோட்டம் தான் இருக்கிறது. ஆனால் அங்கிருந்து இப்படிப்பட்ட குறைபாடுகள் எதுவும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. குறைபாடுகள் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், அது குறித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தொழில் சட்டங்களை சரிவர அமுல்நடத்துவது ஆங்காங்கே இருக்கின்ற பிளான்டேஷன் இன்ஸ்பெக்டர்களைச் சேர்ந்தது. அம்மாதிரி ஆஃபீசர் கன்னியா குமரி மாவட்டத்தில் இல்லை. அதனால் அங்குள்ள தொழிலாளர் களுக்கு அரசு அளிக்கும் பயன்கள் சரியாகக் கிடைக்கவும், சட்டம் ஒழுங்காக அமுல் நடத்தப்படவும் வழியில்லாமல் இருக்கிறது. அதை நிவர்த்திப்பதற்கு கன்னியாகுமரிக்கு ஒரு தனி அதிகாரியை நியமிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்குமானால் அதைப்பற்றி அரசு ஆலோசனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

Winch for Thirukkalikundram temple

*349 Q—THIRU N.K. PALANISWAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal to provide a winch for Thirukkalikundram temple; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) மற்றும் (இ) ஆம். இதற்கான நிதி வசதி திருக்கோயிலில் இல்லாததால், தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தினிடம் நிதி உதவி கோரப்பட்டுள்ளது. வாரியத்தின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு நிதி தேவைப்படுகிறது? இந்தமாதிரியான காரியங் களுக்கு செலவு செய்வதற்கு மொத்தமாக எச்.ஆர். அண்ட் சி இ.-யில் ஒரு ஃபண்டு இருக்கிறதே அந்த நிதியிலிருந்து செலவு செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது? அதில் எவ்வளவு தொகை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.